# குருதேவர்

## இந்து மறுமலர்ச்சி இயக்க அறிக்கை - 28

பண்பாட்டுக் கழக வெளியீடு (உறுப்பினர்களுக்கு மட்டும்) பதிவு; 135/83



ஆலவாய் மூதூர் மதுரை வாழ்
அருள்மிகு மீனாட்சியம்மன்

# மதுரை மாமூதூர் மீனாட்சியம்மன் ஆலயம்

இன்றைக்கு பல கோபுரங்களோடு விரிந்து பரந்து கிடக்கின்ற ஆலவாய் மதுரை மாமூதூர் மீனாட்சியம்மன் ஆலயம் தோன்றி வளர்ந்தவரலாறு இன்றோடு 43, 73, 087 ஆண்டுகள். எனவே, இதனுடைய முழுமையான வரலாற்றை விளக்க ஆயிரக்கணக்கான பக்கங்களையுடைய தொகுதிகளாகப் பல தொகுதிகள் வெளியிட நேரிடும். எனவே, இன்றைய மக்களின் ஆர்வத்தையும், அறிவியல் உணர்வையும், ஆராய்ச்சிப் போக்கையும், மெய்யான இந்து சமயத்தின் தொன்மையைப் பற்றிய பெருமித உணர்வையும் ஊக்குவிக்கும் வண்ணமே இந்தச் சுருக்க விளக்க அறிமுக முன்னுரைக் கட்டுரை எழுதப்படுகிறது

இந்தக் கட்டுரைக்குத் தேவையான செய்திகளனைத்தும் எழுதாக் கிளவிகளாக உள்ளவைகளிலிருந்தும்; எழுதி மறையாக மறைத்துக் காக்கப்படுபவைகளிலிருந்தும்; முறையாகக் குறிப்பிட்டவர்களுக்கு மட்டும் வழங்கப்பட்டு வருபவைகளிலிருந்தும்; நெறியாகச் செயல் வடிவில் மட்டும் விளக்கப்படுபவைகளிலிருந்தும்; தேர்ந்தெடுக்கப் பட்ட அனைவருக்குமுறிய பக்குவப் படுத்தப்பட்ட; எளிதில் பயன்படும்படி பதப்படுத்தப் பட்ட; இலக்கியமாக வழங்கப்படும் வேதங்களிலிருந்தும் இருபத்தேழு வண்ண இலக்கியங்களாக இருக்கின்ற கதைகள், காதைகள், காவியங்கள் (காப்பியங்கள்), கீதைகள், எனப்படும் நான்கு வகைப்பட்ட இலக்கியங்களிலிருந்தும்; புராண இதிகாசங்களிலிருந்தும்; பதினெண் சித்தர் பீடாதிபதிகளால் மட்டுமே எழுதப்பட்டு வரும் குருபாரம்பரியம், அரச பாரம்பரியம், இலக்கிய பாரம்பரியம் எனும் மூன்று வகையான இலக்கியங்களிலிருந்தும்; வாக்கு, வாக்கியம் வாசகம் எனப்படும் பதினெட்டு வகையான இலக்கியங்களிலிருந்தும்......முதலியவைகளிலிருந்து தரப் படுபவைகளாகும்.

நூல்வடிவில் இல்லாமல் பதினெண் சித்தர்கள், பதினெட்டாம்படிக் கருப்பர் -கள், பதினெண் சித்தர் பீடாதிபதிகள், நாற்பத்தெட்டுவகைச் சித்தர்கள், நாற்பத் தெட்டு வகை பீடாதிபதி வழி ஆச்சாரியார்கள் பதின்மூன்று வகைக் கருவழி ஆச்சாரியார்கள். பதின்மூன்று வகைக குருவழி ஆச்சாரியார்கள், நாற்பத்தெட்டுவகை வழிபடு நிலையினர்கள், நாற்பத் தெட்டுவகை அருளாளர்கள், அருளாளிகள் அருளாடு நாயகங்கள்; நாற்பத்தெட்டு வகை மருளாளர்கள், மருளாளிகள், மருளாடு நாயகங்கள் முதலியோர்களும், இவர்களின் கருவழி வாரிசுகளும் பல்வேறு காலங்களின் பல்வேறு கருத்து பற்றி -யெழுதிய குறிப்புகளில் மதுரை, மதுரை மாநகர், மதுரை மூதூர், மதுரை மா மூதூர், ஆலவாய்த் திருநகர், ஆலவாய் மதுரை மாமூதூர்.... பற்றியக் குறிப்புகளும் அதனுடைய மீனாட்சியம்மன் ஆலயம் பற்றிய குறிப்புகளும் நிறைய இருக்கின்றன. இவைகளையும் அடிப்படையாகக் கொண்டு தான் மெய்யான இந்து மதமெனும் மரத்திற்கு இன்றுள்ள ஆணி வேர் போன்ற மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தைப் பற்றிய செய்திகளை வெளியிடுகிறோம்.

தொடர்ச்சி 11-ம் பக்கம்



# எத்தனை ஐயப்பன்கள்! - 5

## —இந்துமதத் தந்தை

சித்தர்களின் இலக்கிய மறுமலர்ச்சியே இந்துமதச் செழிச்சி மீட்சியாகும்.........''— என்று கூறுகிறார் —தாமிரபரணி ஆற்றங்கரைக் கருவூரரின் குருபாரம்பரிய வாசகம்.

கபாடபுரத்துக் கருவூரரின் குருபாரம்பரிய வாசகமொன்று; ''அரி' எனும் திருமாலும், 'அறன்' எனும் சிவனும் இரண்டாக இணைந்தாலும் ஐயனாருக்குச் சமம். இதனால்தான், ஐயனாரை அரி+அறன்—> அரியறன்—> அரிகறன் என்று அழைக்கிறார்கள்.—'' என்றிப்படிக் கூறுகிறது மற்றொரு வாசகம்; ''அண்ட பேரண்டங்களிலிருந்து வந்த ஐயனார் 'வளை'யெனும் வளைந்த குறுந்தடி எறிவதிலும்; 'செண்டு'யெனும் போராயுதம் ஏந்துவதிலும் வல்லவர். இவர், குதிரையும், களிறும் வாகனமாக உடையவர். அல்லி, தாமரை என்ற இருமனைவிகளை உடையவர். இறைச்சியுணவில் பெருவிருப்பமுடையவர் இவர் ஓர் யக்ஞவல்லி'—'' என்று இப்படிக் கூறுகிறது.

தமிழில் 'அ' என்ற அகர எழுத்தைப் பயன்படுத்தி 'அய்யனார்' என்று எழுதும் சொல் ஐ'காரத்தைப் பயன்படுத்தி எழுதப்படும் ஐயனார் என்றச் சொல்லுக்குரிய பொருளை குறிக்காது. எனவே, 'ஐயப்பன்' என்ற கடவுளை வழிபடு நிலையினரை, தேவநிலை பெற்றவரை, தெய்வநிலை பெற்றவரை, இருடிநிலை பெற்றவரை......... (48 வகை நிலை பெற்றவர்கள் இந்த ஐயனார் என்ற சொல்லுக்கு உட்பட்டவர்களாக மெய்யான இந்து மதத்தில் இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத் தக்கது) அய்யப்பன் என்று எழுதுவது தவறு! தவறு!! தவறு!!! மாபெருந் தவறு.

தமிழில் உள்ள உயிரெழுத்துக்கள் பன்னிரெண்டுக்கும்; ஓர் ஆய்த எழுத்துக்கும்; பதினெட்டு மெய்யெழுத்துக்கும் எழுதாக் கிளவியான ஒரு நச்சு எழுத்துக்கும் தனித்தனிக் கடவுள்கள் அல்லது சத்திகள் என்று முப்பத்திரண்டு வகை சத்திகள் உருவாக்கப்பட்டே பதினெண் சித்தர்களின் மெய்யான இந்துமதம் படைக்கப்பட்டுள்ளன. மனிதனுக்கு முப்பத்திரண்டு பற்கள், முப்பத்திரண்டு அங்கங்கள் இருப்பது போலவே, இந்து மதத்துக்கு முப்பத்திரண்டு சத்திகள் படைக்கப்பட்டு இருக்கிறார்கள் இதுதான் மெய்யான இந்து மதத்தின் அடிப்படை இரகசியம். இதைத் தெரிந்திருப்-பவர்கள் பதினெண் சித்தர்களின் பரம்பரையினர். இந்த முப்பத்திரெண்டையும் உயிர்ப்புச் செய்து இயக்கத் தெரிந்தவர்களே பதினெண்சித்தர் பீடாதிபதிகள். எனவேதான், அருளாட்சி, பதினெண் சித்தர் பீடாதிபதிகளால் மட்டுமே மறுமலர்ச்சியும், வளவளர்ச்சியும், ஆட்சிமீட்சியும் முழுமையாகப் பெற்றிடுகின்றது அதாவது, அருளுலக அறியாமைகள், புரியாமைகள், மடமைகள், தவறான இயக்கங்கள், பயனில்லாத செயல்கள், கவைக்குதவாத கற்பனைகள், சுயநலக்காரர்களின் சூழ்ச்சிகள் சுரண்டல்கள், ஏமாற்றுக்கள், சர்வாதிகாரங்கள், முதலாளித்துவப் பிடிப்புக்கள்... முதலிய அனைத்தும் பதினெண் சித்தர் பீடாதிபதிகள் தோன்றும் போது உலக மதத்துறையிலிருந்து முழுமையாக அகற்றப்பட்டிடும். அம்மாபெரும் பணிக்குத் தமிழ்மொழியின் முப்பத்திரண்டு எழுத்துக்களுக்குரிய முப்பத்திரண்டு சத்திகளும் [ஒவ்வொரு சத்தியும் (48) நாற்பத்தெட்டு வகையுடையது.] புத்துயிர்ப்புச் செய்யப்பட்டுப் பயன்படுத்தப்படுவதே மரபு, முறை, நெறி, செயல் சித்தாந்தம்.

'ஐயப்பன்' [ஐயனார்] என்பது உலகமத இருளகற்றும் மறுமலர்ச்சிச் சத்திகளான முப்பத்திரண்-டில் ஒன்று. எனவேதான், இந்த 'ஐயப்பன்' என்ற சொல்லுக்குரிய பொருளும், வரலாறும் தத்துவமும், சித்தாந்தமும், வாழ்வியலும் தக்க தருணத்தில் வெளியிடப்படும் பணி துவக்கப்பட்டிருக்கிறது.

இந்து மதத்தின் இறவாத்தன்மைக்குக் காரணமாக இருக்கின்ற முப்பத்திரண்டு வகை அருளாளர்களில் ஒருவரே ஐயனார் (ஐயப்பன்). இம்மண்ணுலகில் கடந்த நான்கு யுகங்களுக்கும் உரிய 43 73,087 வருடம் ஆண்டுகளுக்குமுரிய நெடிய பெரிய கால இடைவெளியில் ஆயிரமாயிரம் ஐயனார்கள் தோன்றியுள்ளார்கள்.

தொடரும்

# பதினெண் சித்தர்கள் சுட்டிக்காட்டும் பாவப்பட்டியல்

1. குரு துரோகம், விரோதம்.
2. குருவைப் பழித்தல், அழித்தல், இழித்தல்
3. குருவாணை மறத்தல், துறத்தல், மறுத்தல், வெறுத்தல், மீறல், எதிர்த்தல்
4. பூசைகளுக்கு இடையூறு செய்பவர்கள்.
5. ஞானியர் பிச்சையைப் புறக்கணித்தல்.
6. வழிபாட்டு நிலையங்களைச் சிதைத்தல், நலக்கேடு செய்தல்.
7. பொதுச் சொத்தை முறைகேடாகப் பயன்படுத்துதல்.
8. கருகுலம், குருகுலம், தருகுலம், திருகுலம் எனும் அருட்சாலைகளையும் சோலை-களையும் பாட்டைகளையும், கோட்டைகளையும், பள்ளிகளையும், தடுத்தல், கெடுத்தல்...
9. ஈன்ற மகவுக்குத் தன் பால் தரமறுக்கும் தாய்.
10. தன்னை நம்பிப் போக இன்பம் துய்த்து மகிழ்ந்தவரைக் கொலைசெய்தல் — ஒரே ஒருமுறை போகஇன்பம் துய்த்தவர்களானாலும் ஒருவரையொருவர் பாதுகாக்கும் கடமையைப் பெற்றவராவர்.
11. விலங்கினங்களுக்குத் தாகமறிந்து நீரும் பசியறிந்து தீனியும் தராமல் வெயிலில் கட்டிவைப்பவரும், தொடர்ந்து வேலை வாங்குபவரும், அடித்துத் துன்புறுத்துபவரும்,......
12. பொருட்பெண்டிர், போக இன்பத்தில் பங்கு பெருமல் பொருளுக்காக உடலை விற்பவர்.
13. மூத்தோர்களையும் முன்னோர்களையும் மதியாமல் திட்டுவதும் போற்றிப் பேணுமல் கைவிட்டு விடுவதும்
14. அச்சுறுத்திப் பொன்னையும் பொருளையும் பறிப்பவர்; இச்சகம் பேசிப் பொன்னையும் பொருளையும் ஏமாற்றிப் பெறுபவர்
15. நஞ்சு வைத்து நம்பியவரைக் கொலை செய்தல்.
16. பெண்ணின் ஆசையை மறுப்பதும், மறப்பதும், வெறுப்பதும், துறப்பதும்.
17. குடிநீர் நிலைகளைப் பாழ்படுத்தலும்; உண்ணும் பொருளை வீணுக்குவதும்.
18. மனச்சாட்சியின்றி வாழுவது.

எனும் பதினெட்டும் பதினெண் சித்தர்களால் **தண்டனைக்குரிய** பாவங்-களாக, குறைகளாக கறைகளாகப் பட்டியலிட்டுக் காட்டப்படுகின்றன.

—குருபாரம்பரியம்

---


## சித்தர் காயகல்பம்

பதினெண் சித்தர்கள் முறைப்படி தயாரிக்கப்படும் **வளம்** உடலுக்கு ஊக்கம் தருவதோடு; அருளுலகப் பயிற்சிகள் பெறத் தேவையான உறுதியும் நிறைவும் தரவல்லது.

நேரடியாக நீரிலோ பாலிலோ கலந்து சுவை நீராக பருக வல்லது 250 கிராம் ரூ 18-00 முகவர்கள் (AGENT) மாவட்டந்தோறும் தேவை!

—தலைமையகத்துடன் தொடர்பு கொள்க!—

# நமது தாயகம்

## நிறுவன நிர்வாகக் குழு

சாதிகளால். மதங்களால், மடாதிபதிகளால். இலக்கியக் கலைஞர்களால், கலையுலகச் சுவைஞர்களின் நாயகர்களால், அரசியல் கட்சிகளால் சமுதாயச் சீர்திருத்தத் தலைவர்களால், தொழிற்சங்கங்களால், வட்ட, வட்டார நல மன்றங்களால்..... நமது தாயக மக்கள் பல்வேறு பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். இப்பிரிவுகள் ஒன்றேடொன்று போட்டியும், பொருமையும், பகைமையும் மாறுபாடும், வேறுபாடும், முரண்பாடும் வளர்த்துக் கொண்டே வருகின்றன. இதே போலத்தான் தலைவர்களாக இருப்பவர்-களுக்கிடையில் என்றுமே ஒற்றுமையுணர்வோ; ஒருமைப்பாட்டுணர்வோ. நட்புணர்வோ. தோழமையுணர்வோ, கூட்டுணர்வோ,...... முடியாத அளவுக்குத்தான் ஒருவருக்கொருவர் தேவையில்லாத, பயனில்லாத, உண்மையில்லாத பகைமைகளை வளர்த்துக் கொண்டுள்ளார்கள். இவர்களின் நோக்கமெல்லாம் மற்ற தலைவர்களை மட்டம் தட்டியோ, இருட்டடிப்புச் செய்தோ, இல்லாமல் செய்தோ...... தாங்கள் மட்டும் பெரிய தனித்தலைவராக வளர வேண்டுமென்பதுதான். இதற்காகவே, இவர்கள் தேவையே இல்லாத போராட்டங்களையும்; காரணகாரியமற்ற பகையுணர்வுகளையும்; உண்மையற்ற வெறுப்புணர்வுகளையும் மற்றவர்கள் மேல் வளர்த்துக் கொண்டே இருக்கிறார்கள். எனவே தாயகத்து மக்கள் பாகப்பிரிவினையால் பல பங்குகளாக்கப் பட்ட ஒரே மந்தையின் ஆடுகள் போலத் தனித்தனிச் சிறு குழுக்களாக அல்லது கூட்ட-மாகப் பிரிந்து நின்று சரியாக (மேயாமல்) வாழாமல் கலங்கியுள்ளனர். இவர்களையெல்லாம் ஒன்றுபடுத்தும் முயற்சி வென்றிட முடியாத கவலைக்குரிய சிக்கலான நிலையில்தான் இருந்து வருகின்றது. இதுவே நமது தாயக நிலை. இந் நிலையில் மாற்றம் செய்திட ஏற்றமிகு தத்துவம் எது? தலைவர் யார்?

நம் தாயகத்தில், பழமையை ஆராய்ந்தறிந்தும், இன்றைய நிலைமைகளை உய்த்துணர்ந்தும் தேவையான செயல் திட்டங்களை வகுத்திடக்கூடிய தத்துவ நாயகனே தலைவனாக இருந்திட முடியும். அப்படிப்பட்ட தத்துவ நாயகன்,முறையானதாகவும் நிறையானதாகவுமுள்ள மொழியறிவு, இலக்கிய அறிவு, வரலாற்றறிவு பண்பாட்டறிவு, பாரம்பரியப் பயிற்சியுணர்வு, பொதுமை நல நாட்டமுணர்வு, சமத்துவ உணர்வு, சகோதரத் தத்துவ உணர்வு......... முதலியவைகளைப் பெற்றி-ருக்க வேண்டும் அப்படியல்லாமல் எப்படியெப்படியோ முயன்று காலப்போக்கில் சந்தர்ப்ப சூழல்களுக்குரிய சூழ்ச்சிகளைச் செய்து தலைவர்களாகிட்டவர்களே மிகுதியாக உள்ளார்கள் இம்மாபெரும் குறைபாட்டுத் தலைவர்களால்தான் நமது தாயகம் எண்ணற்ற வலுவான, வலிமையான காரண காரியங்களும், சந்தர்ப்ப சூழ்நிலைகளும் எதிர்பாராத கொதிப்பு மிக்க பதட்டமிகு வாய்ப்பு வசதிகளும்...... நிறைய இருந்தும் கூட ஒரு பெரிய இயக்கம் உருவாக முடியவில்லை. பெரும்பாலான மக்களை ஒற்றுமைப்படுத்தி ஒருமையுடன் கிளர்ச்சிமிகு வளவளர்ச்சிப் பணிகளில் ஈடுபடுத்தும் அரியபெரிய தலைவர்கள் தோற்றமும் ஏற்றமும் ஆற்றல்தரு மேலாண்மையும் பெறமுடியவில்லை.

தொடரும்

---

தொடர்பு. கு. சத்திவேல் B.E., நிறுவன நிர்வாகக் குழு,
6, ஆர்டிசியன் சண்முகம் தெரு, அயனாவரம், சென்னை 600023.

# கேள்வியும் நானே....! பதிலும் நானே ..........!

கேள்வி 'ஆண்டவனைக் காண முயல்கிறவர்கள் பத்தர்கள். கண்டு தெளிந்தவர்கள் சித்தர்கள் என்று தேவாரம் கூறுகிறது' என்பது பற்றி என்ன கருத்து?

பதில்: இங்கு தேவாரத்திலுள்ள ஆண்டவர் என்ற சொல்லை நேரடியாக கடவுள் அல்லது தெய்வம் அல்லது இறை என்ற சொல்லுக்கு இணையாக நினைத்தது மாபெரும் தவறு. தேவாரத்தில் இந்த ஆண்டவர் என்ற சொல், மாண்ட பெரியவர் - அருளுலக அருளாளர், பொருளுலக அரசர், பெருநிலக்கிழார், பெருஞ் செல்வர் முதலியோரைக் குறிக்கும். அதாவது சமாதுகளில் செத்தார்களாக இருப்பவர்களை மீண்டும் அருவுருவ நிலைகளில் எழுப்பி அவர்களின் தோல்விகளையும், ஏக்கங்களையும், குறைகளையும் நிறைவுசெய்துதருபவர்களேசித்தர்கள் என்பதே பொருளாகும்

**குறிப்பு:** சித்தர்கள் மனிதர்களின் நல்வினை, அல்வினைகளுக்கேற்ப அவர்களுக்கு உரிய பரிகாரங்களைச் செய்து இப்பிறப்பில் வழிபடுநிலையினர் என்ற 48 வகையினரில் ஒவ்வொரு நிலையினராகப் படிப்படியாக உயருவதற்கு உதவுபவர்களேயாவார்கள். அதாவது அல்லா, அத்தா, அத்தன், அப்பன், அம்மையப்பன், ஆண்டவன், இறை இயவுள், ஈசன், கடவுள், தெய்வம், பட்டவர்...... கணபாடிகள் எனப்படும் 48 வகையினரே உலகத்தவரால் பொதுவாக 'கடவுள்' எனப்படுகின்றனர். இந்த 48 வகைக் கடவுள்களையும் முறையான பயிற்சியாலும், முயற்சியாலும் உரிய பரிகார வழிமுறைகளாலும் உருவாக்குபவர்களே சித்தர்கள் எனவே கடவுளைக் கண்டுத் தெளிந்தவர்களல்ல சித்தர்கள், கடவுள்களையெல்லாம் அடிக்கடி கண்டு தெளிய முற்படும் உயரிய நிலை பெற்றவர்களே சித்தர்கள். இன்னும் சொல்லப்போனால் கடவுள்களின் கடவுள்களே சித்தர்கள். இவர்கள் அண்ட பேரண்டங்கள் முழுவதும் தங்களின் அமுதத் தமிழ் மொழியால் கருவழி வாரிசுகளையும். குருவழி வாரிசுகளையும் உருவாக்கி இந்துமதம் எனும் 'சித்தர் நெறி'யால் ஆளுகின்றார்கள். இது ஒரு பகுத்தறிவு மதம்(A rationa-listic Religion). இது ஒரு சமூக விஞ்ஞானம்(The Siddharism namely the Induism is a social science). இது ஒரு அநுபவப் பூர்வமான தத்துவம் (It is a practical philosophy). இது நாடுகளுக்கும், காலங்களுக்கும் ஏற்ப பயிரினங்களையும் உயிரினங்களையும் பாதுகாத்து மேம்படுத்துகிறது. எனவே, கண்மூடித்தனமாக சித்தர்களைப் பற்றியோ சித்தர்களின் சித்தாந்தத்தைப் பற்றியோ கருத்துக்களைத் தரும் சிறுபிள்ளைத்-தனம் கைவிடப்பட வேண்டும். இத்திருத்தத்தை ஏற்று திருந்துதல் வேண்டும்

கேள்வி '..... அனுபூதி ஞானம் பெற்றவர்களை Mystics என்ற ஆங்கிலச் சொல் குறிக்கும். அதுவே தமிழில் சித்தர் என்பதாகவும் சொல்லலாம்......' விளக்கம் தேவை

பதில்: ஆங்கிலச் சொல்(லிலுள்ள) Mystics குறிக்கும்பொருள் சித்தர்களை முழுமையாகக் குறிக்காது ஏனென்றால் Mysticism என்ற தெய்வீக நெறியைத் தோற்றுவித்தவர்களே இந்த சித்தர்கள்தான். அதாவது இவர்களை The creaters or the founders of the Mysticism என்றுதான் கூறவேண்டும் இதன்படி இவர்கள் இந்த தெய்வீக நெறியின் சிற்பியாக, படைப்பாளராக ஆகிறார்கள்.

ஆங்கிலத்தில் Divinators என்றொரு சொல் உண்டு. இதற்கு அருட்கலைஞர்கள் என்று பொருள் இந்தச் சொல்கூட சித்தர்களை முழுமையாகக் குறிக்காது. ஏனென்றால் சித்தர்கள அருட்கலைகளின் தோற்றமாகவும், உள்ளீடாகவும், எல்லையாகவும், இருக்கிறார்கள். எனவே தமிழில் உள்ள சித்தர் என்ற சொல்லை அப்படியே ஆங்கிலத்தில் Siddhar என்று எழுதி The founders of Religions and father's of all sciences and arts philosophy & Theology என்றுதான் குறிக்க வேண்டும்.

—தொடரும்



# இந்தியாவில் மார்க்சீயம் - 10

—சித்தர்

உண்மையான புள்ளி விவரம் இல்லாமல் எதையும் அளித்ததே இல்லை......... முதலாளித்துவச் சுரண்டலை ஒழிப்பதற்கு வரலாற்றினால் அளிக்கப்பட்ட ஒரே சாதனம் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகரப் போராட்டந்தான்...... 'உற்பத்தி சாதனங்களை ஒரு முனைப்படுத்துவதும், உழைப்பு சமூக மயமடைதலும் எந்த அளவு முனைப்படுகிற தென்றால் அவை முதலாளித்துவ மேலோடுக்கு முற்றிலும் முரணானதாகின்றது. இந்த மேலோடு உடைத்தெறியப்படுகின்றது. முதலாளித்துவ தனியுடமைக்கு சாவுமணி அடிக்கப்படுகின்றது.. ...... 'முதலாளித்துவ சுரண்டலின் இரகசியங்களைப் பற்றி அம்பலப் படுத்தி முதலாளித்துவ வளர்ச்சிக்குப் பின்னுள்ள பொருளாதார விதிகளைக் கண்டுபிடித்த மார்க்சு விஞ்ஞானக் கம்யூனிச சித்தாந்தம் முழுவதையும் மெய்யான விஞ்ஞான மட்டத்திற்கு உயர்த்தினார்...... கம்யூனிச சமுதாயம் பற்றிய தத்துவார்த்த அடிநிலைகள் பற்றி இந்நூலின் பூர்வாங்க வாசகங்களிலும் மேலும் அபிவிருத்தி -யடைந்தன.

'மூலதனம்' என்கின்ற நூலின் மதிப்பை மேலும் கவர்ச்சிகரமானதாக்கியது எங்கல்சின் பல மதிப்புரைகள்தான். இதனை 1867 இல் அக்டோபர் மாதம் முதல் 1868 சூன் இறுதிவரை அதாவது இந்தப் பத்துமாத காலத்தில் எழுதினார் இதுவரைப் பல்வேறு நாடுகளின் பொருளாதார - அரசியல் பிரச்சினைகளைப் பற்றி ஆய்ந்துவந்த மார்க்சு, முழுவதும் அத்துறையிலிருந்து விலகி தனது முழுமை நூலான 'மூலதனத்' தின் மற்ற பாகங்களை வெளியிடுவதில் ஈடுபட்டார். அதற்காகப் பல குறிப்புகளை தமது இறுதிக் காலம்வரை அதாவது 14-3-1883 வரை பணியாற்றினார். இவரின் முக்கிய நூலான 'மூலதனம்' வெளிவந்து இங்கிலாந்து மற்றும் இரசிய அரசியல் பகுதியில் பெரியதொரு மாற்றம் ஏற்படுத்தியது மட்டுமின்றி; பொருளாதார நிலையையும் சற்று மேம்படுத்தியது. இந்நிலையில 1869 ஆம் ஆண்டு சூலை முதல் தேதியன்று எங்கல்சு தனது வேலையை விட்டு விட்டு தன்னை முழுநேர அரசியல்வாதியாக ஆக்கிக் கொண்டார்.

மார்க்சு தனது மூன்றாவது பகுதியை முழுமைப் படுத்துவதற்காக 1869 நவம்பரில் 'நிலவாடகைக் கோட்பாடு' பற்றி உலகந் தழுவியக் கருத்துக்களை அறிய வேண்டியிருந்தது இதற்காக இவர் இரசிய மொழியைக் கற்று அம்மொழியிலேயே அந்நாட்டு இலக்கியங்களைப் படித்தார். 'இதற்காக இவருக்குப்பல இரசிய விஞ்ஞானிகளும் அரசியல்வாதிகளும் உதவினர். 1869 நவம்பர் டிசம்பர் காலத்தில் இலண்டனில் நடந்த பொதுக்குழுக் கூட்டங்களில் மார்க்சு, ''பாட்டாளி வர்க்கச் சர்வ தேசியம்' என்ற கோட்பாட்டை வளப்படுத்தி, நியாயப்படுத்தி, உறுதிப்படுத்திப் பேசினார்! இதில் உலகெங்கும் உள்ள ஒடுக்கப்பட்ட மக்களின் தேசிய விடுதலை இயக்கத்தினைப் பாட்டாளி வர்க்கம் ஆதரிக்க வேண்டுமென்ற 'புதிய கண்ணோட் -டத்தைத்' தோற்றுவித்தார். பின்னர் 1870 சூலை 23 இல் மார்க்சு பிரான்சுக்கும். பிரசியாவிற்கும் இடையில் நிகழ்ந்த போர் பற்றி ஐரோப்பா, அமெரிக்கா நாடுகளிலுள்ள 'இண்டர் நேசனல்' அங்கத்தினர்களுக்கு முதல் வேண்டுகோள் அறிக்கையொன்று விடுத்தார்.

(தொடரும்)

# 'அமாவாசை விரதமும் சுடுகாட்டுப் பூசையும்' - 2

அதாவது, ஆருயிர் மறுபிறப்பு எடுத்திருந்து ஆவியும் ஆன்மாவும் மட்டுமே மீதமிருந்தாலோ அல்லது ஆவி மாண்டு போயிருந்து ஆன்மா மட்டும் இருந்தாலோ அல்லது மூன்றுமே மறுபிறப்பில் ஒருங்கிணைந்து இருந்தாலோ இருப்பவை மட்டுமே அமாவாசை விரதத்தாரின் அழைப்புக்கேற்ப வரும்.

குறிப்பு: (a) ஆவி மந்திறவாதிகளால் கட்டப்பட்டோ அல்லது குறிப்பிட்ட வழிபாட்டு நிலையங்களில் ஐக்கியமாகியோ இருந்திட்டால் அதைப் பற்றிய அறிகுறிகள் விரதப்பூசையில் தெரியும், (b) ஆன்மா முத்தியடைந்து அண்ட பேரண்டங்கள் கடந்து ஒளியணுக்களின் பெருங்கடலில் கலந்திருக்குமேயானல் கூட விரதத்தார்களின் அழைப்புக்கு வராது. அதையும் அதைப்பற்றிய அறிகுறியும் அமாவாசை விரதத்தாருக்குத் தெரியவரும். (c) ஒருவேளை ஆவி, ஆன்மா, ஆருயிர் மூன்றும் ஒருங்கிணைந்து சமாது நிலையை எய்தியிருக்குமேயானலும் சரி அல்லது பிறவாமையைப் பெற்றிருக்குமென்ருலும் சரி, அல்லது இறவாமையைப் பெற்றிருக்குமென்ருலும் சரி அமாவாசை விரதத்தாரின் அழைப்புக்கேற்ப இவை வரமுடியாது ஆனல் இவற்றின் சித்தி நிலைகள் பற்றிய அறிகுறிகள் அமாவாசை விரதத்தாருக்கு தெரியவரும்

**அமாவாசை விரதத்தாரின் அழைப்புக்கு இணங்கி அவர்களுடைய வீட்டிற்கு வருகை புரியாத ஆருயிர் ஆவி ஆன்மா என்ற மூன்றும் தங்களுடைய உடலை அல்லது பிணத்தை எங்கு எரித்தார்களோ அல்லது புதைத்தார்களோ அந்த இடத்திற்கு சித்தர் நெறிக்குரிய ஐந்து அமாவாசை நாட்களில் கட்டாயமாக வருகை புரிந்திடுவார்கள் வருகை புரிந்திடுவார்கள் வருகை புரிந்திடுவார்கள்** இந்தப் பேருண்மையின் அடிப்படையில்தான் அமாவாசைக்குரிய ஐந்து(5) நாட்களில் (சித்தர் நெறிப்படி) தங்கள தங்களின் வசதி வாய்ப்புக்களுக்கேற்ப ஏதாவது ஒரு அமாவாசை நாளில் வழக்கமாகத் தங்களின் குடும்பத்தவர்களை அல்லது குலத்தவர்களை அல்லது இனத்தவர்களை [குறிப்பு: பிருமணர்களின் வருகைக்குப் பிறகு சாதிகளின் அடிப்படையில் சுடுகாடுகளையும் புதைகாடுகளையும் உருவாக்குவதற்கு இந்தத் தத்துவம் எந்த அளவில் பயன்பட்டது என்பது தெரியவில்லை]. *எரிக்கின்ற சுடுகாடுகளிலும் *புதைக்கின்ற புதைகாடுகளிலும் [*ஒரே குடும்பத்தில் பிறந்தவர்களின் பிணங்களில் சில புதைக்கப்படுவதும் சில எரிக்கப்படுவதும் மரபாக இருப்பதை இன்றைக்கும் காணமுடிகிறது] சென்று பூசை செய்ய வேண்டுமென்ற சட்டம் மெய்யான இந்துமதத்தில் பதினெண் சித்தர்களால் உருவாக்கப்பட்டது. அதாவது மெய்யான இந்துமதப்படி எந்தக் குடும்பத்தவர்களாக இருந்தாலும் அமாவாசை விரதத்தன்று அந்தக் குடும்பத்தார்களின் சுடுகாட்டிற்கும், புதைகாட்டிற்கும் சென்று வீட்டிலிருந்து விரதத்திற்கென்று சமைக்கப்பட்ட உணவை எடுத்துச் சென்று படைத்து ஊதுபத்தி ஏற்றி அகல்விளக்கேற்றி முறைப்படி தேங்காய் பழம், வெற்றிலை பாக்கு, பூ வைத்துப் பூசை செய்து வர வேண்டும். இதன் மூலமே அவர்கள் தங்களின் முனேர்களுக்கு நன்றிக்கடன் செய்தவர்களாவார்கள். எனவே தான், பதினெண்சித்தர்கள் 43,73,087 ஆண்டுகளுக்கு முன்னல் இம் மண்ணுலகிற்கு இனமுறியாக்கண்டம் எனப்படும் குமரிக்கண்டத்தில் வழங்கிய மெய்யான இந்துமதத்தில் சுடுகாடு, புதைகாடு, இடுகாடு, நன்காடு விடுகாடு, படுகாடு, நடுக்காடு........ என்று பதினெட்டு(18) வகையான காடுகள் அமாவாசை விரதநாட்களில் வழிபாட்டுக்குரிய நிலையங்களாக அமைக்கப்பட்டன.

—தொடரும்

# அன்புள்ள சேவுகனுக்கு!

## இ. ம. இ. ஒரு விடுதலை இயக்கமே.

அன்புச் சேவுக!

எனவே, நாம் இதுவரை மதத்துறையை இழித்தும் பழித்தும், சிதைத்தும் சீரழித்தும் வள வளர்ச்சியும் ஆட்சியும் பெற்றுச் சுகவாழ்வு வாழ்ந்து வந்த அனைத்துத் துறைகளையும் நேர்மையோடு நேரடியாக விமர்சித்து மதவிடுதலைககான போராட்டத்தைத் துவக்கியேயாக வேண்டும். இது ஓர் உலகந்தழுவிய போராட்டமாகவே வளர்ச்சி பெறும்! வளர்ச்சி பெறும்! வளர்ச்சி பெறும்! எனவே உலகமதங்களனைத்துக்கும் மூலமாகவும், முதலாகவும், தாயாகவும், தலைமையாகவும், வழியாகவும் வழிகாட்டியாகவும், வழித்துணையாகவும், கருவூலமாகவும, இருப்பதுதான் சித்தர் நெறியெனும் நமது மெய்யான இந்து மதம் (The True Induism is the Mother of all the Religions on this hemisphere) எனவேதான் ஒரு தாய் தன்னுடைய சேய்களைக் காப்பாற்றுவதுபோல் நாம்தான் உலக மதங்களனைத்தையும் நாத்திகர்களிடமிருந்தும் மத விரோத துரோகச் சத்திகளிடமிருந்தும் தன்னல வெறிப்பிடித்த மதப்போலிகளிடமிருந்தும், கூலிகளிடமிருந்தும், காலிகளிடமிருந்தும், காப்பாற்ற வேண்டும்! காப்பாற்ற வேண்டும்! காப்பாற்ற வேண்டும்!

நண்ப! மத விரோத துரோகச் சத்திகளின் ஈனச் செயல்களால்தான் நாத்திகர்கள், பகுத்தறிவு வாதிகள், சீர்திருத்த வாதிகள் என்பவர்கள்; 'மதம் ஒரு மடமை ; 'மதம் ஒரு கற்பனை'; 'மதம் ஒரு கனவு'; மதம் முன்னேற்றத்துக்குத் தடை'; 'மதம் பயனற்றது'; 'மதம் தேவையற்றது'; 'மதம் அறிவுக்குப் புறம்பானது'; 'மதம் புரியாத ஒன்று'; 'மதம்தான் முதலாளித்துவத்தை வளர்க்கின்றது; 'மதம்தான் ஏழைகளை அடங்கியொடுங்கி ஏழைகளாகவே இருக்கச் செய்கிறது'; 'மதம்தான் அடிமை யுணர்வை வளர்க்கிறது'; 'மதம் மனநோயாளிகளை உருவாக்குகிறது'; 'மதம் கோழைகளை வளர்க் கிறது'; 'மதம் ஆபாசங்களை வளர்க்கிறது'; மதம் காட்டு மிராண்டித்தனங்களைக் காப்பாற்றுகிறது'; மதம் மக்களை மயக்கும் ஒரு மயக்கப் பொருள்'; 'மதம் சமுதாய விழிச்சிக்கும் எழிச்சிக்கும் தடையாக இருக்கிறது' 'மதம உருவாக்கும் மதவெறிகளால்தான் அரசியலிலும், சமுதாயத்திலும் அமைதி யின்மை விளைகின்றன.' என்பன போன்ற எண்ணற்ற குற்றச சாட்டுக்களை தொடர்ந்து மதத்தின் மீது சுமத்த முடிகிறது. இதனை நன்கு தெரிந்தும், ஆராய்ந்தறிந்தும்; முழுமையாக புரிந்தும், முறையாக உணர்ந்துமே.........செயல்படப் புறப்பட்டிருப்பவர்கள் நாம். என்ற விழிப்புணர்வும், நம்பிக்கையுணர்வும் நம்மிடையே எப்போதும் பசுமையாக இருக்க வேண்டும். இருக்கவேண்டும். இருக்க வேண்டும். இப்பேருண்மைக்கேற்பவே நமது கருகுலத்திலும், குருகுலத்திலும், அருட்பணி விரிவாக்கத் திட்ட நிலையங்களிலும் ஆய்வுக் கூட்டங்களிலும்...... முறையான பயிற்சிகள் முழுமை யாக வழங்கப்படுகின்றன, வழங்கப்படுகின்றன, வழங்கப்படுகின்றன. என்பதனை நம்மவர்களாவது நன்கு புரிந்துகொள்ள வேண்டும். அதாவது, குருதேவராகிய யாம், நம்மவர்களையெல்லாம் மத விடுதலைப் போராட்டத்திற்காக மாவீரர்களாகத் தயாரிக்கிறோம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் நமது இயக்க நிறுவன நிர்வாகக் கட்டமைப்புகளிலும் நடவடிக்கை களிலும் எமது நோக்கும் போக்கும் ஊக்கும் கண்டிப்பு மிக்கவைகளாக கடுகடுப்பும் சிடுசிடுப்பும் உடையவைகளாக ஈவு இறக்கமற்ற விமர்சனங்களை வழங்குபவைகளாக நெருப்பாறு ஓடுவது போல் இருப்பதனை அனைவரும் புரிந்து கொள்ள முடியும். இதற்கு தங்களைப்போன்ற முன்னணித் தளபதி களும் வீரர்களும் (ஆண், பெண் இருபாலரும்) எமக்குதவி செய்ய வேண்டும். உற்ற துணையாக இருக்க வேண்டும்,

நண்ப! மதத்துறையில் வாழும் ஒருசில தனிமனிதர்கள் சுயநலத்தாலோ உலகியலினாலோ தவறுகளைச் செய்கிறார்கள். ஆனால் அரசியல், கலை, சமுதாயம், முதலிய துறைகளைச் சார்ந்த வர்கள் தவறுகளையும் குற்றங்களையும் செய்வதற்காகவே வாழுகிறார்கள். அதாவது மதத்துறையில் நூற்றுக்கு ஒருவர் அல்லது இருவர்தான் தவறு செய்பவர்களாக இருக்கிறார்கள். ஆனால் அரசியல், கலை, சமுதாயம் முதலிய துறைகளில் தவறு செய்யாதவர்கள்தான் நூற்றுக்கு ஒருவர் இருவர் என்றிருக்கிறார்கள் இந்தப் பேருண்மையை ஆபாசப்படுத் தாமல், பிறர்மனம் புண்படாமல் தேவையற்ற ஆரவாரம் இல்லாமல் ...... மிக மிக நயமாகவும், நாகரீகமாகவும் அனைவருக்கும் எடுத்துக் கூறியே நமது மத விடுதலைப் போராட்டப் படையை உருவாக்க வேண்டும், உருவாக்கவேண்டும், உருவாக்க வேண்டும். இதுவே எமது நிலை! நமதுநிலை!

அன்பு,

ஞாலகுரு சித்தர் கருவூரார்.

# விநாயகர் - விக்னேசுவரர் - கணபதி - பிள்ளையார் - 3

—ஞால குரு

இந்து மதத்திலிருந்துதான் சமண மதமும் (சைண மதமும்), புத்த மதமும்(பௌத்த மதம்) தோன்றின என்பதற்கு சான்ருகவும் ஊன்ருகவும் விளங்குவது இந்த பிள்ளையார் சிலையும் பிள்ளையார் வழிபாடும்தான். அதாவது, சமணர்களும் புத்தர்களும் பிள்ளையார் சிலையை தங்களுடைய அனைத்துக் கோயில்களிலும் வைத்துப் போற்றுகிருர்கள். தங்களுடைய அனைத்து வழிபாட்டிலும் பிள்ளையாரை முதன்மையான பங்கு பெறச் செய்கிருர்கள் [''.........The Religious importance given to the idol of the god Pillaiar and his worship, is the best proof and evidence of the fact that the Jinism and Buddism are the daughters of the Induism — Taken from the writting of his holress siddhan Kakkaiyar Mr. M. PALANISAMY PILLAI]

முதல் யுகமான கிரேதாயுகத்தில் இந்து மதம் தோற்றுவிக்கப்படுவதற்குரிய சூழல்கள் உருவாக்கப்பட்ட காலத்தில் ]The pre - Indu - Historic Age], அதாவது 43 73,086 ஆண்டுகளுக்கு முன்ஞல் தோராயமாக சில ஆண்டு கால இடைவெளியில் விண்வெளியிலுள்ள அண்ட பேரண்டங் களிலிருந்து வந்த பல சிவபெருமான்களில ஒருவர் தமது மகனை யானைத் தலையை உடைய பிள்ளையாராகவும்; அந்த தலையிழந்த யானையை மனிதத் தலையையுடைய கணபதியாகவும் மாற்றினர். [குறிப்பு: இந்த மனிதத் தலையும் யானை உடலையும் உடைய கணபதியின் சிலைகள் கடலுள் மறைந்த இளமுறியா கண்டத்தில் அதிகமாகக் காணப்படுகின்றன, தற்பொழுதும், இந்தக் கணபதியின் சிலை ஒன்று திருச்செங்காட்டான் குடி என்ற இடத்தில் உள்ளது. மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் கிராமியக் கோயில்களில் இச்சிலைக் காணப் படுகிறது. அதுவும் பாழடைந்த பழங்கோயில்களில் தான் காணப்படுகிறது.] இப்படி இவர், யானைத்தலையை உடைய பிள்ளையாரை உருவாக்கித்தான் தமது 1. தந்தர, 2. தந்திற 3. தந்திர, 4. தாந்தர, 5. தாந்தரீக, 6. மந்தர, 7. மந்திற, 8. மந்திர, 9. மாந்தர, 10. மாந்தரீக, 11. எந்தர, 12. எந்திற, 13. எந்திர, 14. ஏந்தர, 15. ஏந்தரீக, 16. சித்த, 17. தவ 18. வேள்வி எனும் 18-வகையான பூசைக்குரிய *நூல்களை எழுதினர். அதாவது இவர் சொல்ல இவரது மகஞன பிள்ளையார் எழுதினர். [*நூல்கள் = பூசை மொழிகள். பூசை விதிகள் பூசை மரபுகள், பூசைப்படிகள், பூசை மறைகள், பூசை முறைகள், பூசை நெறிகள், பூசை வேதங்கள் ...........என்று 18-வகைப்படும.]

இந்த கிரேதாயுகத்துச் சிவபெருமானைப் பின் பற்றியே மூன்ருவது யுகமான துவாபரயுகத் -தில் தோன்றிய சித்தர் கருவூரார் வழி தோன்றிய யுகத்தில் தோன்றிய 18- வியாசர்களும் தங்களுடைய சித்தி நிலைக்குப் பிறகு தவம் செய்து யானைத் தலையையுடைய பிள்ளையாரை வர வழைத்து அவருடன் கூட்டாகச் சேர்ந்து 18-புராணங்களையும் எழுதினர்கள்.

இந்தப் பிள்ளையார் சிற்பங்கள் பல வகை கோலங்களில் அமர்ந்தும், நின்றும், நடன மாடியும், தவழ்ந்தும், படுத்தும் இருக்கும் நிலைகளில் உருவாக்கப்பட்டிருப்பது இந்து மதத்தில் பிள்ளையாருக்கு எத்தகைய முதன்மையும் மேன்மையும் இருந்திட்டன என்பதின் விளக்கமேயாகும்

பிள்ளையார் என்பது ஐந்து வகைப் பிள்ளையாராகவே வழக்காற்றில் சிறப்பாக வடிவமைப்பு பெற்று போற்றப்பட்டது அதாவது நமசிவாய என்ற சிவபெருமானின் திருமந்திரத்தில் உள்ள ஐந்து எழுத்துக்களுக்கேற்ப ஐந்து வகை பிள்ளையார்கள் படைக்கப்பட்டன. ஆனல் காலப் போக்கில். [அதாவது எந்த யுகத்தில் என்று தெரியவில்லை] ஐந்து வகை பிள்ளையார்களும் ஆறு படை வீடுகளிலிருந்த முருகன் சிலைகளை அதாவது வடிவமைப்புகளை ஒன்ருக்கி ஆறு தலைகளையுடைய முருகன் சிலைகள் உண்டாக்கப் பட்டதுபோல்; இந்த வகைப்பட்ட பிள்ளையார்களையும் [ந+ம+சி வா+யா] ஒன்ருக்குவதற்காக ஒரு புதிய வடிவம் அதாவது ஐந்து தலையுடைய சிலை உருவாக்கப் பட்டது. இதுதான் பிள்ளையார் வழி பாட்டிலேயே மிகப் பெரிய புரட்சியை செய்தது — என்று கபாடபுரத்துக் கருவூரர் குறிப்பதாக பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரார் குறிக்கின்ருர். (தொடரும்)

மெய்யான இந்து மத வரலாற்றுப்படி தொன் மதுரை, தென் மதுரை, மதுரை, வடமதுரை, மாறுமதுரை,.........என்று ஐந்து மதுரைகள் குறிக்கப் படுகின்றன. இவற்றுள் பஃறுளியாற்றங்கரையிலிருந்த தொன் மதுரையையும்; குமரியாற்றங்கரையிலுள்ள தென் மதுரையும்; வைகையாற்றங்கரையிலுள்ள மதுரை -யும் தான் மீனாட்சியம்மன் ஆலயம் என்ற ஒன்றினைப் பெற்றிருக்கின்றன. மேலும் இம் மூன்று நகர்கள் மட்டும் தான் திருநகர் மாமூதூர், ஆலவாய்,........என்ற சிறப்புப் பெயர்களைப் பெற்றிருக்கின்றன இந்த மூன்று நகரங்களும் மூன்று எல்லை -களாகக் கொண்டு ஒரு முக்கோண வடிவச் சத்தி பீடம் இளமுறியாக் கண்டமெனும் குமரிக் கண்டத்தில் அருளாட்சிக்காக உருவாக்கப்பட்டன. அதாவது சுமார் இன்றைய விந்திய மலையிலிருந்து தெற்கே ஏழாயிரம் (7000) கல் தொலைவு நீளமும், நாலாயிரம் (4000) கல் தொலைவு அகலமுள்ள மிகப் பெரிய நிலப்பரப்பாகவே இருந்திருக் -கிறது இளமுறியாக் கண்டம். இந்தக் கண்டமே இம் மண்ணுலகில் நீருக்குள்ளிலிருந்து வெளிப்பட்ட முதல் பெரு நிலப் பரப்பாகும், இன்றைக்கு இந்து மாக்கடல் என்றுள்ள தண்ணீர்ப் பரப்பு அனைத்துமே ஒரு காலத்தில் இன்றைய தென்னிந்தியாவோடு சேர்த்து ஒரு மிகப் பெரிய நிலப்பரப்பாக இருந்திருக்கின்றன, அது படிப்படியாக முதல் கடல் கோளில் தொன் மதுரையோடும்; இரண்டாவது கடல் கோளில் தென் மதுரையோடும் கடலுக்குள் மூழ்கி விட்டது அந்தக் குமரிக் கண்டத்தின் எஞ்சியப் பகுதிகளில் மிகப் பெரிய பகுதியாக இருப்பது தான் தென்னிந்தியா என்று சொல்லப் -படும் விந்திய மலை முதல் குமரிமுனை வரையுள்ள நிலப்பகுதி எனவே இம் மண்ணுலகின் முதல் மதமான பதினெண் சித்தர்களின் மெய்யான இந்துமதத்தின் மூலச்சத்தி சித்தர்களின் மெய்யான இந்து மதத்தின் மூலச்சத்தி பீட மூன்று கோயில்களுள் ஒன்றே இன்றுள்ள ஆலவாய் மதுரை மாதூர் தேவி மீனாட்சியம்மை ஆலயம் இது கோயிலல்ல' ஏனெனில் நாடோடிப் பாடல் எனப்படும் பிற்காலச் சித்தர் -களின் பாடல்களில்

''ஆலயம் கோயிலாச்சுதடி குதம்பாய்
கோயில் ஆலயமாச்சுதடி குதம்பாய்,
மயில் குயிலாகக் கூவு தடி குதம்பாய்
குயில் மயிலாக ஆடுதடி குதம்பாய்
கோலமிட்டென்ன ஓலமிட்டென்ன குதம்பாய்
ஆலவட்டம போடுதடி அத்துனையும் குதம்பாய்
அறிவதேது புரிவதேது இனிமேல் குதம்பாய்...

என்ற புலம்பல் காணப்படுகிறது இது பற்றிய ஆராய்ச்சிக் கருத்துக்களை இத்துடன் நிறுத்திக் கொள்கிறோம் விரிவஞ்சி;

மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்துக்குரிய *அருளூறு வாசகங்களில் [*மந்தர, மந்திற மந்திர, மாந்தர, மாந்தரீக; தந்தர, தந்திர, தந்திற தாந்தர, தாந்தரீக, எந்தர, எந்திர எந்திற, ஏந்தற, ஏந்தர, ஏந்தரீக, பூசை, தவம், வேள்வி, முதலியவைகளுக்குரிய அத்திரங்கள், சாத்திரங்கள், சூத்திரங்கள், தேத்திரங்கள், நேம, நியம, நிடத, நிட்டை, நீதிகள், சுருதி, ஆரண, மீமாம்சைகள் முதலியவற்றின் வாசகங்கள்] (தொடரும்).

---

தொடர்பு:- தலைமைப் பொறுப்பாளர், சி. கவிக்குமார், B Sc,
56, N G O காலனி, பொன்னேரி-603 204.

# யார் பெரியார்? யாருக்குப் பெரியார்?.........

## சித்தர் கருவூரூர் எழுதிய நூலிலிருந்து.........!

. இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் ஈடுஇணையில்லாத இரண்டாவது தலைவர் காக்கா வழியன் பண்ணையாடி முடிகணம் சித்தர் காகபுசுண்டர், காகையர் ம. பழனிச்சாமி பிள்ளையவர்கள் 1952 ஆம் ஆண்டு 'குலக்கல்வித் திட்டத்தை' எதிர்த்து தாழ்த்தப்பட்ட இனத்தின் தன்னிகரில்லா தலைவர் பெரியார் ஈ.வெ.ரா. பற்றிக் கூறிய ஒரு சில வாசகங்களை அப்படியே குறிப்பிடுகிறோம்.

''.........இந்தியத் துணைக் கண்டம் முழுவதுமுள்ள தாழ்த்தப்பட்ட மக்களைப் பாதுகாப்பதற்காக அந்த இனத்திலேயே தோன்றிய அந்த இனத்தின் தலைவர் டாக்டர். அம்பேத்கார் அவர்கள் தனக்குக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி அரசியல் சட்டத்திலேயே ஒரு சில வழிவகைகளைச் செய்திட்டார் ஆனால் அவை. பெருமளவு பயன்பட முடியாதபடி செய்திட்டார்கள் இந்தப் பிருமணர்கள் இதில். மிகப் பெரிய பிருமணச் சமூக வீரர்களாக அல்லாடி கிருஷ்ணசாமி ஐயரும், V V. சீனிவாசன் ஐய்யங்காரும் விளங்குகிறார்கள். இவர்கள். இருவரும் தங்களின் சட்ட அறிவின் திறமையினால் சூழ்ச்சியாக டாக்டர். அம்பேத்கார் எழுதிய இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் (The Consititution of India) பல குறைகளைக் கண்டு பிடித்து தாழ்த்தப்பட்ட மக்கள் அவர் எதிர் பார்த்த அளவிற்கு நன்மையடைய முடியாதபடி செய்து விட்டார்கள். ஆனால், பெரியார் ஈ வெ ரா. அவர்களிடம் இவர்கள் இருவரால் ஏதும் செய்ய முடியவில்லை.

சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் குலக் கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்து; பிருமணர்கள் தான் படிக்க வேண்டும்; தாழ்த்தப்பட்டவர்கள் படிக்கக் கூடாது; படித்தாலும் அவர்களுக்கு வேலை கொடுக்கக் கூடாது; அதாவது அவர்களின பரம்பரைத் தொழிலைத் தான் அவரவர் மேற்கொள்ள வேண்டுமென்ற வர்ணாசிரம தர்மத்தை. சனாதன தர்மத்தை மீண்டும் கொண்டு வந்ததைக் கண்டு; நமது சிறைக் கஞ்சாச் சிங்கம் வெண்தாடி வேந்தர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் பொங்கும் கடலென மாறினார். எரிமலையாக வெடித்தார்.

''நம்மவர்கள் அனைவரும் கத்தி வைத்துக்கொள்ள வேண்டும்; பெட்ரோல் வைத்துக கொள்ள வேண்டும்; தீப்பந்தம் வைத்துக் கொள்ள வேண்டும்; நான், ஆணையிட்டதும் அனைத்துப் பிருமணர்களின் வீடுகளையும் தீவைத்துக் கொளுத்துங்கள்'' —என்று இன மானமிக்க தன்மானத் தமிழர்களுக்கு அறிவிப்புச் செய்தார். இந்த, அறிவிப்பு எல்லோருக்கும்; மிகச் சாதாரணமானதாகவோ, புரிய முடியாதவையாக வோ விளங்க முடியாதவையாகவோ இருந்திருக்கலாம். ஆனால், பிருமணர்கள் புரிந்து கொண்டார்கள்; விளங்கிக் கொண்டார்கள், தங்களின். ஆரிய இனம் பூண்டோடு அழியப் போவதைத் தெளிவாக அறிந்து கொண்டார்கள். தங்களின் தமிழர்கள் மீதான சூழ்ச்சிகளை, சுரண்டல்களை, மாயைகளை, ஏமாற்றுக்களை......வன்முறையால் தான் முழுமையாக அழித்தொழிக்க முடியும் என்பதைப் பெரியார் அறிந்து கொண்டார் என்பதைப் புரிந்து கொண்டார்கள் ஓடிச் சென்று இராசகோபாலச்சாரி யாரிடம் முறையிட்டார்கள்; ஓலமிட்டு அழுதார்கள்......

KVS பிரிண்டர்ஸ், பொன்னேரி.